1987 மார்ச் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வரையிலும் எதுவும் வரவில்லை. அவர்கள் எழுதித் தரவும் இல்லை. புள்ளி விவரங்களை எழுதித் தந்தால் அதைப்பற்றி கவனிக்கலாம்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக தஞ்சை மாவட்ட மக்கள் எதிர் பார்த்துக்கொண்டிருப்பது காவிரி நதி நீர் பிரச்சினை. நம் அரசு சார்பில் மத்திய அரசுக்கு நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டும் என்ற அரசு கோரிக்கை இருக்கின்றது. அதற்கு மத்திய அரசு நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெரிய பிரச்சினை. ஏற்கெனவே கேட்டாகிவிட்டது. விவாதம் முடிந்தாகிவிட்டது. இந்த விவாதத்திலேயே பதில் சொல்லிவிட்டார்கள். 1987-88 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதமும், பதிலுரையும் முடிவடைந்தன.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (1—4—1987) காலை 10 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

53. 1981-82 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

54. 1984-85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் க கத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1987) 49 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ்).

TRUTH ALONE TRIUMPHS

55. 1984-85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

56. 1984-85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆண்டுக் கணக்குகள். [1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

88. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுக்கான அறிக்கைகளில் (வணிகம்) வேளாண்மைத்துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தொன்பதாவது அறிக்கை.

89. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) கைத்தறி, துணிகள், கதர்த்துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பதாவது அறிக்கை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS